செ.வெ.எண். 511 நாள்– 11.12.2006

# <u>செய்தி வெளியீடு</u>

இன்று (11.12.2006) இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கும் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் விவாதிக்கப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2006–07) மூன்று இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.
- அடுத்த நிதியாண்டிலிருந்து நான்கு ஆண்டுகளில் எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப் படும்.
- எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் குடும்ப அட்டைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும்.
- இத் திட்டம் பொங்கல் திருநாளையொட்டி "போகி" தினத்தன்று சென்னையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். தொடர்ந்து அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர் பெருமக்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும். துவக்கவிழாவன்று முப்பதாயிரம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்படும்.
- 2007 ஜனவரி மாத இறுதிக்குள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும், மார்ச் 2007க்குள் மீதமுள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள்.
- தற்போது இயங்கி வருகின்ற எரிவாயு விநியோகஸ்தர்கள் மூலமாக நகர்ப் பகுதிகளிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் சுற்றளவு பகுதியில்

உள்ள கிராமங்கள் இத்திட்டத்தை செயல்படுத்துவற்கு தேர்ந்தெடுக்கப்படும்.

- அடுத்த நிதியாண்டு (2007–08) முதல் தற்போது எரிவாயு விநியோகஸ்தர்கள் இல்லாத பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே முகவராக செயல்பட்டு தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- 200 குடும்ப அட்டை உள்ள நியாய விலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தகைய நியாயவிலைக் கடைகள் இல்லாத மாவட்டங்களில் 500 குடும்ப அட்டை வரை உள்ள நியாயவிலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளை கிராமப்புறங்களில் ஊராட்சித் தலைவரின் தலைமையில், கிராம நிர்வாக அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர், மக்கள் நலப் பணியாளர் மற்றும் சமூகநலத் தொண்டர் அடங்கிய குழு தேர்வு செய்யும். நகர்ப்புறப் பகுதிகளில் வார்டு உறுப்பினர் தலைமையில் வரித் தண்டலர் (Bill Collector) , வருவாய்த் துறை அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர் மற்றும் சமூகநலத் தொண்டர் கொண்ட குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

இக்கூட்டத்தில் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கோ.சி.மணி, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.துரைமுருகன், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.என்.நேரு, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் திரு ஐ.பெரியசாமி, உணவுத் துறை அமைச்சர் திரு எ.வ.வேலு, சுகாதாரத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் தலைமைச் செயலாளர், முதன்மை ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள்

**வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.**

* * * *

வெளியீடு: **இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**